# இராம கோபாலன்

*நிறுவன அமைப்பாளர்*

59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676


3-2-2010

## செஞ்சி கோதண்டராமர் கோவிலில் பாதிரி அத்துமீறல், தாசில்தார் உடந்தை?! இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் கண்டனம்!

500 ஆண்டுகள் பழமை வாய்ந்த செஞ்சி கோதண்டராமர் கோவில் ஆர்க்காடு நவாப் ஆக்கிரமிப்பால் பாழடைந்து போனது. அதன்பிறகு வந்த ஆக்கிரமிப்பான ஆங்கிலேய, பிரெஞ்சு போன்ற அரசுகளாலும் செஞ்சி புறக்கணிக்கப்பட்டு வந்தது.

சுதந்திரம் பெற்ற பிறகும் நம்மை ஆளும் அரசாங்கம் வருவாய் உள்ள கோயில்களைத் தன் வசம் எடுத்துக் கொண்டதே தவிர சிதலமடைந்த கோயில்களையும் வருமானம் இல்லாத கோயில்களையும் நட்டாற்றில் விட்டது!

இத்தனை சோதனைகளுக்குப் பிறகும் செஞ்சி கோதண்டராமர் கோவிலில் வருடந்தோறும் தீர்த்தவாரி வெகுவிமரிசையாக பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றுவந்தது, வருகிறது. இங்கு இருந்த சுவாமி விக்ரகங்கள் பகைவர்களால் சூறையாடப்பட்ட நிலையில் ஊர் மக்களால் ராமர் விக்ரகம் வைத்து வழிவழியாய் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. இதனை வழிநடத்திச் செல்ல பக்தர்கள் குழாம் இருந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த டிசம்பர் 7ஆம் தேதி கோயில் இடம் கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமானது என செஞ்சி போலீஸில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்போது நடந்த சமாதானக்கூட்டத்தில் 1878ஆம் ஆண்டு கிரய பத்திரத்தைக் காட்டிய கிறிஸ்தவர்கள், அதில் குறிப்பிட்டிருந்த கோயில்மண்டபம், மயில் கோபுரம், கிளி கோபுரம் நீங்கலாக என்று குறிப்பிட்டிருப்பதை மறைத்ததுடன், அத்துடன் கூடிய மூலப்பத்திரத்தையும், கோயில் டிரஸ்ட் சம்பந்தமான பத்திரம் பற்றி மூலப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவற்றையும் சமர்ப்பிக்கவில்லை.

இதனிடையில் பாதிரி ஜேம்ஸ் ஆல்பிரட் என்பவர் பிப்ரவரி 1 அன்று ஆலயத்திற்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த பக்தர்களை வெளியேற்றி கோயிலுக்குப் பூட்டு போட்டுள்ளார். இது சம்பந்தமாக விசாரிக்க வந்த தாசில்தாரும் கோயிலைப் பூட்ட உத்தரவிட்டுள்ளார்.

கோயில் நிர்மாணப் பணியில் ஈடுபட்டு வரும் குழுவினர் கேட்ட தகவலை தாசில்தார் அலுவலகம் இதுவரை தரவில்லை. ஆனால் கிறிஸ்தவர்களுக்குச் சாதகமாகக் கோயிலை மூட உத்தரவிட முனைந்துள்ளது கண்டிக்கத்தக்கது.

கோயில் ஒரு அலுவலகமோ, கட்டிடமோ அல்ல. இது பொது சொத்து, வழிபாட்டிற்குரிய இடம். நினைத்த மாத்திரத்தில் பூட்டுவது ஊருக்கும், நாட்டிற்கும் கெடுதலைக் கொண்டுவரும் என்பது மக்கள் நம்பிக்கை.

கோயிலுக்கு என்று வழிபாட்டு முறைகள் உள்ளன. இதனைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை. வானுயர்ந்த கோபுரமும், கோயிலும் 500 ஆண்டுகளுக்கும் மேலான பழமையானது என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. இதுபோன்ற வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்கப் போதுமான சட்டங்கள் மத்திய, மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கோயிலை யாருக்காவது விற்பது சட்டப்படி செல்லாது. இந்துக்கள் வழிபட அனுமதி மறுத்த தாசில்தார், அத்துமீறி கோயிலுக்குள் சென்று இந்துக்களைக் கேவலப்படுத்தி மனம் புண்படுத்திய பாதிரி ஜேம்ஸ் ஆல்பிரட் ஆகியோர் மீது காவல்துறை கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது நில உரிமையான சிவில் பிரச்னை என்றாலும், இது வழிபாட்டுத் தலம். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்துக்களின் பராமரிப்பில் இருந்து வரும் கோயிலை மற்றவர்கள் எப்படி சொந்தம் கொண்டாடமுடியும்?

தமிழக முதல்வர் தலையிட்டு உடனடியாக இந்துக்களின் வழிபாட்டு உரிமையை நிலைநாட்ட வேண்டும். தவறு செய்தவர்கள் மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**